

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 221 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – பங்குனி 08 – சனிக்கிழமை 22 மார்ச் 2025 – வெளியீர் 16 பக்கங்கள்

Established : 10.8.1942 - Volume : 83 - Issue 221: Thiruvalluvar Year - 2056 - Panguni 08 - Saturday 22 March 2025 - Dak 16 Pages ₹ 5.00


## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆலோசனை!

# தொகுதி மறுசீரமைப்பு; சென்னையில் இன்று கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டம்!

## மாநில முதல்வர்கள் - அரசியல் தலைவர்கள் பங்கேற்கின்றனர்!

**சென்னை, மார்ச் 22 -**

**தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் கூட்டு நடவடிக்கைக் குழு தொடர்பான முதற்கட்ட ஆலோசனைக் கூட்டம் சென்னையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று நடைபெறுகிறது.**

மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் தென் மாநிலங்களின் தொகுதிகளை குறைக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு சதி செய்து வருகிறது.இந்த அரசியல் உள்நோக்கத்தை உணர்ந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 5ஆம் தேதி அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டி விவாதித்தார்.

தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து விவாதித்து முடிவெடுக்கவும், போராட்டத்தை முன்னெடுக்கவும் தென் மாநிலங்களின் எம்.பி.க்கள் கொண்ட கூட்டு நடவடிக்கைக் குழுவை அமைப்பது என முடிவெடுக்கப்பட்டது.

இதுதொடர்பாக 7 மாநில முதலமைச்சர்கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதினார். மேலும், தி.மு.க. நிர்வாகிகள் அடங்கிய குழுவினர், கர்நாடகா, கேரளா, ஆந்திரா, தெலுங்கானா, ஒடிசா, பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களுக்கு நேரில் சென்று அம்மாநில அரசியல் தலைவர்களை சந்தித்து தொகுதி மறுசீரமைப்பின் பாதிப்புகள் குறித்து எடுத்துரைத்தனர்.

சென்னையில் இன்று நடைபெறும் கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் பங்கேற்க வருமாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சார்பில் அழைப்பு விடுத்தனர். அதன்படி,



தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் கூட்டு நடவடிக்கைக் குழு தொடர்பான முதற்கட்ட ஆலோசனைக் கூட்டம் சென்னையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று நடைபெறுகிறது. தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் நமது நியாயமான கோரிக்கைகள் நிச்சயம் வெற்றியடையும் என்றும் இந்த முன்னெடுப்பு இந்தியாவை காக்கும் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி மூலம் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

**வரலாற்றுச் சிறப்பு மிக்க நாள்!**

இதற்கிடையே, இந்தியகூட்டாட்சிக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க நாள் என்ற தலைப்பில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான கூட்டு நடவடிக்கைக்குழு கூட்டத்தில் தமிழ்நாட்டுடன் இணையும் கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, ஒடிசா மேற்கு வங்கம் மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களை சேர்ந்த தலைவர்களை தாம் மனதார வரவேற்பதாக கூறியுள்ளார்.

தமிழ்நாட்டின் முன்முயற்சியாக தொடங்கிய தொகுதி மறுசீரமைப்பு விவகாரம், தற்போது, ஒரு தேசிய இயக்கமாக வளர்ந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். இந்தியா முழுவதும் உள்ள மாநிலங்கள் நியாயமான பிரதிநிதித்துவத்தை கோருவதற்கு தமிழ்நாட்டுடன் கைகோர்த்துள்ளதாகவும் முதலமைச்சர் நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.

இது நமது கூட்டுப் பயணத்தில் ஒரு முக்கியமான தருணம் என்று கூறியுள்ள முதலமைச்சர், இது நமது நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்கும் ஒரு இயக்கத்தின் தொடக்கமாகும் என்று குறிப்பிட்டுள்ளார். எனவே, நாம் அனைவரும் ஒன்றிணைந்து தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் சாதிப்போம் என்று உறுதிப்படத் தெரிவித்துள்ளார்.

---

## இன்று தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக – ஏழு மாநில அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் கூட்டம்!

# நிச்சயம் வெற்றியடையும்! இந்தியாவைக் காக்கும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி உரை!

**சென்னை, மார்ச் 22-**

**தொகுதி மறுசீரமைப்புத் தொடர்பாக சென்னையில் இன்று ஏழு மாநிலங்களைச் சேர்ந்த அரசியல் கட்சி பிரமுகர்களின் கூட்டம் நடைபெறுகிறது. இதுகுறித்து கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள காணொலி உரையில், “நம்முடைய நியாயமான கோரிக்கைகள் நிச்சயம் வெற்றியடையும்! நம்முடைய இந்த முன்னெடுப்பு இந்தியாவைக் காக்கும்” என்று குறிப்பிட்டுள்ளார்.**

தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக ஆந்திரா, கர்நாடகா, கேரளா, தெலங்கானா, ஒடிசா, மேற்கு வங்கம், பஞ்சாப் ஆகிய ஏழு மாநிலங்களைச் சேர்ந்த அரசியல் கட்சி பிரதிநிதிகளின் கூட்டம் இன்று (22.3.2025) சென்னையில் நடைபெறவுள்ளதையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள காணொலி உரை வருமாறு:-

அனைவர்க்கும் வணக்கம்.

ஃபேர் டீலிமிட்டேஷன்! இது தான் இப்போது பேசுபொருளாக இருக்கிறது!

தி.மு.க. ஏன் இதை பேசுபொருளாக ஆக்கியது என்றால், 2026இல் தொகுதி மறு சீரமைப்பு கண்டிப்பாக நடந்தே ஆக வேண்டும்! அப்போது மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு செய்தால் நம்முடைய எம்.பி.க்கள் பிரதிநிதித்துவம் பாதிக்கப்படும்! இதை உணர்ந்துதான் நாம் முதலில் குரல் எழுப்பி இருக்கிறோம்!

இது எம்.பி.க்கள் எண்ணிக்கை சார்ந்த பிரச்சினை மட்டும் கிடையாது; நம் மாநிலத்தின் உரிமை சார்ந்த பிரச்சினை! அதனால் தான் தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்துக் கட்சிகளையும் அழைத்து - கூட்டம் நடத்தினோம்!

பா.ஜ.க. தவிர, மற்ற அனைத்துக் கட்சியினரும் ஓரணியில் நின்று, நியாயமான தொகுதி மறுசீரமைப்பு வேண்டும் என ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோம்!

அதில், இந்த தொகுதி மறுசீரமைப்பால் பாதிக்கப்பட உள்ள மற்ற மாநிலங்களையும் ஒருங்கிணைத்து போராட வேண்டும் என்று முடிவெடுத்தோம்!

அதற்காக, ஆந்திரா - கர்நாடகா - கேரளா - தெலங்கானா - ஒடிசா - மேற்கு வங்கம் - பஞ்சாப் ஆகிய ஏழு மாநில முதலமைச்சர்களுக்கும் - நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் இருக்கின்ற அந்த மாநிலங்களைச் சார்ந்த அனைத்துக் கட்சிகளின் தலைமைக்கும் நான் கடிதம் எழுதினேன்.

அந்தக் கடிதங்களை ஒரு அமைச்சர் மற்றும் ஒரு எம்.பி., அடங்கிய குழு, அவர்களை நேரில் சந்தித்து கொடுத்து விளக்கம் அளித்தார்கள்.

அனைத்து மாநில முதலமைச்சர்களிடமும் நானே தொலைபேசியில் பேசினேன். இதை தொடர்ந்து, சிலர் நேரடியாக வருவதாகவும், சிலர் ஏற்கெனவே ஒத்துக்கொண்ட நிகழ்ச்சிகள் காரணமாக தங்களுடைய பிரதிநிதிகளை அனுப்புவதாகவும் கூறினார்கள்.

இந்த முதற்கட்ட ஆலோசனைக் கூட்டம் இன்று (மார்ச் 22) சென்னையில் நடக்க இருக்கிறது! இப்போது எதற்கு இந்தக் கூட்டத்தை நடத்த வேண்டுமென்று சிலர் கேட்கிறார்கள் . . .

தொகுதி மறுசீரமைப்பால் நம் தமிழ்நாடும் – நாம் அழைத்திருக்கின்ற மாநிலங்களும் பாதிக்கப்பட்டால் இந்திய நாட்டில் கூட்டாட்சிக்கான பொருளே இருக்காது! ஜனநாயகத்திற்கான மதிப்பே இருக்காது! நாடாளுமன்றத்தில் நம்முடைய குரல்கள் நசுக்கப்படும்! நம்முடைய உரிமைகளை நிலைநாட்ட முடியாது! இது இந்த மாநிலங்களை அவமதிக்கின்ற செயல்!

எனவே, மக்கள் தொகையை கட்டுப்படுத்தி சிறப்பாக செயல்பட்டு நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு தண்டனை கொடுத்துவிட கூடாது!

அதனால்தான், தமிழ்நாட்டில் இருக்கின்ற பெரும்பாலான கட்சிகளின் ஒருங்கிணைந்த சிந்தனைப்படி, மற்ற மாநிலங்களை ஒருங்கிணைக்கின்ற இந்தக் கூட்டம் நடைபெற உள்ளது!

இந்தக் கூட்டத்தில் ஒரு முடிவு எடுக்கப்படும்! அதன் அடிப்படையில் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோம்!

நம்முடைய நியாயமான கோரிக்கைகள் நிச்சயம் வெற்றியடையும்! நம்முடைய இந்த முன்னெடுப்பு, இந்தியாவைக் காக்கும்!

நன்றி வணக்கம்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காணொலி உரையில் குறிப்பிட்டுள்ளார்.

---

## தொகுதி மறு சீரமைப்புக் கூட்டத்தில் பங்கேற்க

# கேரள முதல்வர் - கட்சித் தலைவர்கள் சென்னை வருகை!

*சென்னை, மார்ச் 22 -*

*தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் கூட்டு நடவடிக்கைக் குழு தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் சென்னை வந்தடைந்தனர்.*

*தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் கூட்டு நடவடிக்கைக் குழு தொடர்பான முதற்கட்ட ஆலோசனைக் கூட்டம் சென்னையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று நடைபெறுகிறது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அழைப்பினை ஏற்று கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் சென்னை வந்துள்ளார். சென்னை விமான நிலையத்தில் அமைச்சர் பி.டி. ஆர்.பழனிவேல் தியாகராஜன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் கேரள முதலமைச்சரை நேரில் சென்று வரவேற்றனர்.*

*இதேபோல், கேரளாவைச் சேர்ந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகி பினோய் விஸ்வத், சென்னை வந்தடைந்தார். விமான நிலையத்தில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி வரவேற்றார்.*

*பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பினோய் விஸ்வம், தொகுதி மறு வரையறை தொடர்பான கூட்டு நடவடிக்கை குழு கூட்டம் சென்னையில் நடைபெறவுள்ளது வரவேற்கத்தக்கது என்று தெரிவித்தார். நாடு முழுவதும் பாசிச சித்தாந்தத்தை திணிக்க பா.ஜ.க. முயற்சி செய்து வருவதாக அவர் குற்றம் சாட்டினார்.*

*பஞ்சாப் மாநிலத்திலிருந்து சிரோமணி அகாலி தளத்தின் நிர்வாகி பல்விந்தர் சிங் மற்றும் பஞ்சாப்பின் முன்னாள் கல்வி அமைச்சர் தல்ஜித் சிங் சீமா ஆகியோர் சென்னையில் நடைபெறும் கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டத்தில் பங்கேற்க சென்னை வருகை தந்தனர். அவர்களை விமான நிலையத்தில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, அருண் நேரு ஆகியோர் வரவேற்றனர்.*

*பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சிரோமணி அகாலி தளத்தின் நிர்வாகி பல்விந்தர் சிங், மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு என்பது ஆபத்தானது என்றும், இந்த விவகாரத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கூட்டியுள்ள கூட்டு நடவடிக்கைக்குழு ஆலோசனைக் கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் தெரிவித்தார்.*